DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.No.75/2025**
Prosecution Witness P.W.3

Name : **திரு.செல்வக்குமார்** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 12.01.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

<u>முதல் விசாரணை</u>

எனக்கு புகார்தாரர் நதியா மகள் உறவு முறை. இரண்டாவது சாட்சி செல்வராஜ் எனக்கு மைத்துனர் உறவு முறை. இறந்து போன சஞ்சீவ் குமார் நதியாவின் மகன். கடந்த 21.10.2024 ஆம் தேதியன்று காலை 06.00 மணிக்கு சஞ்சீவ் குமார் இறந்து கிடந்ததை கேள்விப்பட்டு நான் சம்பவயிடத்திற்கு சென்று போய் பார்த்தேன். வேற எந்த விபரமும் எனக்கு தெரியாது. நான் வேறெந்த விபரமும் பார்க்கவில்லை, எனது மைத்துனர் ராஜா என்பவர் தான் பார்த்துள்ளார், அவர் தற்போது இறந்துவிட்டார்.தில்லை காளியம்மன் கோயில் வழியாக எதிரிகள் மூவரும் சென்றதைப் பார்த்ததாக 20ம் தேதியன்று இரவு 7:30 மணிக்கு பார்த்ததாக சொன்னார். எனக்கு இந்த வழக்கு தொடர்பாக வேறு எந்த விவரமும் தெரியாது.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. )**

<u>அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை</u>

கடந்த 20.10.2024 ஆம் தேதியன்று இரவு 8.00 மணி அளவில் நானும், ராஜாவும் மீன் வாங்கிக் கொண்டு படிக்கட்டு பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது பால் தோல் என்ற பாலமுருகன் அவரது மகன் பார்த்தசாரதி மற்றும் அஜித் குமார் ஆகிய மூவரும் தில்லை காளியம்மன் கோவிலுக்கு பின்புறம் கூடி கோவிலுக்கு கிழக்கு பக்கம் இருந்த ராஜாங்கம் கட்டிடத்திற்கு போவதும் வருவதுமாக இருந்தார்கள் என்றும், நானும் அதற்கு பின்பு வீட்டிற்கு போய் விட்டேன் என்றும், மறுநாள் காலையில் பார்த்தபோது சஞ்சீவ் குமார் கொலை செய்து தில்லை காளியம்மன் கோயில் அருகில் உள்ள பழைய கட்டிடத்திற்குள் இறந்து கிடந்ததாக சொல்லவும் நானும் சென்று பார்த்தேன் என்றும், ராஜாங்கம் கட்டிடத்திற்குள் சஞ்சீவ் குமாரின் தலை, கழுத்து, இடுப்பு ஆகிய இடங்களில் ரத்தக்காயம் பட்டு இறந்து கிடந்தார் என்றும், அதை நான் பார்த்தேன் என்றும், ஏற்கனவே முன் விரோதம் காரணமாக இந்த கொலை சம்பவம் நடந்தது என்றும், இது தொடர்பாக அனைத்து விஷயங்களும் எனக்கு தெரியும் என்றும், தற்பொழுது எதிரிகளை இந்த வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.12 17:18:10 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.